# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.361/மா/2023

நாள். 03.01.2024

திரு.T.R.குப்புசாமி
மதுரை – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் (3) மத்தியம்,
மதுரை மாநகராட்சி – எதிர்மனுதாரர்

மதுரை, காமராஜர் சாலை, சித்துபாலகிருஷ்ணய்யர் சந்து, கதவு எண். 25–C என்கிற முகவரியில் வசிக்கும் திரு. T.R. குப்புசாமி என்பவரின் 21.11.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.11.2023 அன்று பெறப்பட்டு, 361/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை, காமராஜர் சாலை, சித்துபாலகிருஷ்ணய்யர் சந்து, கதவு எண். 25–C என்கிற முகவரியில் வசிக்கும் திரு. T.R. குப்புசாமி என்பவர் தனது 21.11.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

" மதுரை மாநகராட்சி மண்டலம் எண்.3 வார்டு எண் 60 எல்லீஸ் நகரில் பிளாட் எண் M 469 பிரகாரம் சொந்தவீடு இருந்து வந்தது. மேற்படி வீட்டில் குடியிருப்பும், வணிகமும் கலந்த கட்டிடமாக பயன்படுத்தப்பட்டு வந்தது. அதில், வணிக கட்டிடத்திற்குண்டான மின் இணைப்பு 21.03.2019ல் இணைப்பை துண்டித்து மொத்த கட்டிடமும் குடியிருப்பு உபயோகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும், ஆகவே வணிக அடிப்படையில் உள்ள வரிவிதிப்பை ரத்து செய்து கொடுக்கும்படியும், மனு

சமர்ப்பித்தேன். என் மனுவின் மீது நடவடிக்கை எடுக்காததால் மக்கள் குறைதீர்க்கும் சிறப்பு முகாமில் 18.04.2023லும், அதன்பின் 29.08.2023லும் மனு சமர்ப்பித்தேன். வணிக அடிப்படையில் உள்ள வரிவிதிப்பை ரத்து செய்யாமல் இன்றுவரை நிலுவையாக உள்ள வரித்தொகையினை செலுத்தும்படி மாநகராட்சி நிர்வாகம் தவறானநோக்கத்தில் வற்புறுத்துகிறது. ஆகவே, 01.04.2019 முதல் வணிக அடிப்படையில் உள்ள வரிவிதிப்பை ரத்து செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 29.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி, மண்டலம் 3 உதவி ஆணையரிடம் கோரப்பட்டது.**

**3)மதுரை மாநகராட்சி மண்டலம் 03 (மத்தியம்) உதவி ஆணையர் தனது 30.11.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:**

" திரு.T.R.குப்புசாமி என்பவரின் வணிக பயன்பாட்டிலான வரி விதிப்பு எண். 115/060/901618–ஐ 2019 முதல் வணிக அடிப்படையிலிருந்து குடியிருப்பு பயன்பாடாக பயன்படுத்தி வருவதாகவும், மேற்படி வணிக அடிப்படையிலான வரி விதிப்பினை ரத்து செய்யுமாறு மனுவில் கோரியதற்கிணங்க தற்போது மேற்படி வணிக அடிப்படையிலான வரி விதிப்பு எண்.115/060/901618–ஐ மென்பொருளில் நீக்கம் செய்து 2019 முதல் வணிக அடிப்படையிலான பகுதியினை அளவீடு செய்து வரி விதிப்பு எண். 115/060/901620–ல் குடியிருப்பாக மாற்றி புதிய கேட்பு கடிதம் மூலம் மனுதாரருக்கு உரிய விபரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

**4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தென்காசி மாவட்டம் குற்றாலம் அரசு விருந்தினர் மாளிகையில் 04.12.2023 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 29.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**5) 04.12.2023 அன்று பெய்த பெருமழையின் காரணமாக அன்றைய விசாரணை நடைபெறவில்லை. பின்னர் 12.12.2023 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரை 18.12.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகும்படி அறிவுறுத்தப்பட்டது.**

**6) மனுதாரர் 18.12.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:**

" தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவத்தில் என்னால் அளிக்கப்பட்ட முறையீட்டு மனுவின் மீது மதுரை மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனது குறைகள் தீர்க்கப்பட்டுவிட்டன. எனினும் நான் மனு அளித்து மூன்று வருடங்கள் கழித்து தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை இம்முறைமன்றத்தில் எனது வாக்குமூலமாக சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**7) மதுரை மாநகராட்சி மண்டலம் –03 உதவி வருவாய் ஆய்வாளர்/கண்காணிப்பாளர் 18.12.2023 அன்றைய நேரடி விசாணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:**

" தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் நான் 18.12.2023 தென்காசி விருந்தினர் மாளிகையில் மண்டலம் 3 உதவி ஆணையர் சார்பாக ஆஜராகி எனது வாக்குமூலத்தை இதன் மூலம் பதிவு செய்கிறேன். மண்டலம் 3 (மத்தியம்) மதுரை மாநகராட்சி உதவி ஆணையர்(பொ) கடித எண் நக.எண்.ம3/ஆ1/0006716/2023 நாள் 13.12.2023ல் தெரிவித்துள்ள வாக்குமூலம் எனது வாக்குமூலமாக பதிவு செய்கிறேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**8) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு வாக்குமூலம், மதுரை மாநகராட்சி மண்டலம் –03ன் உதவி வருவாய் அலுவலர்/ கண்காணிப்பாளர் வாக்குமூலம் மற்றும் உதவி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:**

மதுரையைச் சேர்ந்த திரு T.R.குப்புசாமி என்பவர் மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண் 60, எல்லீஸ் நகரில் பிளாட் எண் M 469ல் உள்ள குடியிருப்பு வீடும், வணிகமும் கலந்த கட்டிடமாக பயன்படுத்தப்பட்டு வந்தது எனவும், 21.03.2019ல் வணிகக் கட்டிடத்திற்குண்டான மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு மொத்த கட்டடமும் குடியிருப்பு உபயோகமாக பயன்படுத்தி வந்த நிலையில் மதுரை மாநகராட்சி மண்டலம் 3 அலுவலர்களிடம் வணிகவரி விதிப்பை ரத்து செய்ய மனு அளித்தும் அதனை நிறைவேற்றவில்லை என தெரிவித்து தன் மனு மீது உரிய நடவடிக்கை எடுத்து, வணிகவரியை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டியுள்ளார்.

2. மனுதாரரின் கோரிக்கைக்கிணங்க தற்போது மேற்படி வணிக அடிப்படையிலான வரி விதிப்பை மென்பொருளில் நீக்கம் செய்து 2019 முதல் வணிக அடிப்படையிலான பகுதியினை அளவீடு செய்து குடியிருப்பு வரியாக மாற்றி 30.11.2023 (ம) 13.12.2023 நாளிட்ட கடிதத்தின் மூலம் மனுதாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்று மதுரை மாநகராட்சி மண்டலம் 3ன்(மத்தியம்) உதவி ஆணையர்(பொ) தன்னுடைய அறிக்கையிலும், மதுரை மாநகராட்சி மண்டலம் 3ன் உதவி வருவாய் அலுவலர்/கண்காணிப்பாளர் தன்னுடைய வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளனர்.

3. மனுதாரர் தன்னுடைய வீட்டிற்கு உரிய வணிக மின் இணைப்பை துண்டித்து குடியிருப்பு பகுதிக்கான வரியை வழங்க கோரி 25.06.2019ல் குறைதீர்க்கும் நாளன்று மனு அளித்தபின்பு, மனுதாரர் இம்முறைமன்றத்திற்கு 21.11.2023 நாளிட்டு புகார் மனு அளித்து, இம்முறைமன்றம் விசாரணைக்கு உத்தரவிட்ட பின்னர்தான் மனுதாரரின் கோரிக்கை பரிசீலனை செய்து மதுரை மாநகராட்சி மண்டலம் 3ன் அலுவலர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். மதுரை மாநகராட்சியின் மண்டலம் 3ன் அலுவலர்களின் இத்தகைய செயல் உள்நோக்கம் கொண்டதாக உள்ளது என்றும் மனுதாருக்கு அவசியமற்ற மன உளைச்சல் அளிக்கக்கூடிய செயல் என்றும் இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி குறிப்பாக:-

<u>பிரிவு 7</u> The Ombudsman shall perform all or any of the following functions, namely-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) Pass an order on the proved allegation in the following manner, namely-

(a) xxxx

(b) xxxx

(c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules

மற்றும்

<u>பிரிவு: 12</u>(1) The ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely-

(a) x x x x

(b) x x x x

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

(d) x x x x

(e) x x x x

கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

மனுதாரர் 2019–ஆம் ஆண்டு தன்னுடைய வீட்டிற்கு உரிய வணிக வரியின் இணைப்பை துண்டித்துவிட்டு, மொத்த கட்டடமும் குடியிருப்பு பகுதியாக மாற்றி அதற்கான வரி விதிக்க கோரி மனு அளித்தும், நடவடிக்கை எடுக்காமல் மனுதாரரின் மனு மீது இம்முறைமன்றம் விசாரணைக்கு உத்தரவிட்ட பின்னர் மனுதாரரின் கட்டடத்திற்கு குடியிருப்பு பகுதிக்கான வரி விதித்த மதுரை மாநகராட்சி மண்டலம் 3ன் சம்மந்தப்பட்ட முன்னாள் மற்றும் இந்நாள் அலுவலர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு 45 தினங்களுக்குள் அனுப்பி வைக்குமாறும் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

The thick skinned, indifferent and inefficient field level officials of the Corporation deserve to be dealt with deterrently by suitable and commensurate disciplinary action for this inordinate delay lethargy and cursed absolute inaction with the blessings of the superior officers whose leadership failure is the root cause. The Director of Municipal Administration is directed to issue appropriate instructions to the Commissioner, Madurai to ensure prompt action on the petitions of the citizens. Otherwise, the trust of the people in the system will be seriously dented and the image of the Corporation of Madurai will suffer a scar difficult to erase.

2024–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.T.R. குப்புசாமி,
கதவு எண். 25–C,
சித்துபாலகிருஷ்ணய்யர் சந்து,
காமராஜர் சாலை,
மதுரை.

2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம்,
மதுரை–625 002.

3) உதவி ஆணையர், (ஆணையர் வழியாக)
மண்டலம்–03 (மத்தியம்)
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம்,
மதுரை–625 001.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

5) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்